



# Voice of Jagadguru


advaitam paramanandam

an e-magazine on advaita




## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)




# ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் 73வது வர்த்தந்தி மஹோத்ஸவம் சிறப்பு இதழ்

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்,
ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ  ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்
அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்



# Voice of Jagadguru

advaitam paramanandam — an e-magazine on advaita




ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)


An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகளின் அருளுரைகள் 1

நிர்மமோ நிரஹங்கார: மனிதனுக்கு, தான் சிறியதொரு நற்காரியம் செய்தாலும்கூட "நான் செய்தேன்" என்று அஹங்காரம் வரும். அந்த அஹங்காரம் நிறைய தவறுகளுக்குக் காரணமாக அமைந்துவிடும். "நான் தவறு செய்தால் என்னை யார் கேட்பார்கள்? எனக்கு எல்லாம் தெரியும், எனக்கு எது இஷ்டமோ நான் அதைச் செய்வேன்" என்கிற ஒரு மனோபாவத்தை அஹங்காரம் ஏற்படுத்துகிறது. இத்தகைய மனோபாவம் எல்லாத் தீமைகளுக்கும் அடிப்படையாகும். எனக்கு எல்லாம் தெரியும் என்று சொல்பவனைவிட நிறையத் தெரிந்தவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். எனக்கு நிறைய சக்தி இருக்கிறது என்று சொல்பவனைவிடச் சக்தி வாய்ந்தவர்கள் எவ்வளவோ பேர் இருக்கிறார்கள். இந்த உண்மையெல்லாம் அஹங்காரம் உள்ளவர்களுக்குத் தெரியாது. மேலும் நாங்கள் செய்கின்ற தீய செயல்களை யாரும் பார்ப்பதில்லை என்று வேறு நினைத்துக் கொள்கிறார்கள். நம்முடைய செயல்களை யாரும் பார்ப்பதில்லை என்று நினைப்பது தவறு. நாமும் நமது தவறான செயல்களை யாரும் பார்ப்பதில்லை என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம்.




ஆதித்யசந்த்ராவனலோSநிலச்ச த்யௌர்பூமிராபோ ஹ்ருதயம் யமச்ச । அஹச்ச ராத்ரிச்ச உபே ச ஸந்த்யே தர்மச்ச ஜானாதி நரஸ்ய வ்ருத்தம் ॥ என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. மனிதன் செய்யும் காரியங்களை பஞ்சமஹாபூதங்களான பிருத்வீ, தேஜஸ், ஜலம், வாயு, ஆகாசம், சூரிய சந்திரர்கள், ஸந்தியா காலம், மனதினுள்ளிருக்கும் அந்தர்யாமியான பரமாத்மா – இவ்வளவு பேர் பார்த்துக் கொண்டிருக்கும்போது யாரும் பார்க்கவில்லை என்று சொல்வது முறையா? இத்தகைய பேச்சு நமக்கு வருவதற்கு நம்மிடமுள்ள அஹங்காரம்தான் காரணம். அஹங்காரம்தான் தவறுகள் பல நடப்பதற்கும் காரணம். ஆகவே அஹங்காரம் இருக்கக் கூடாது.



Voice of Jagadguru

advaitam paramanandam


an e-magazine on advaita




ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)


An Unit of the e magazine Voice of Jagadguru)


## ஶ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகளின் அருளுரைகள் 2



மனிதன் எந்தக் காரியத்தை எடுத்துக் கொண்டாலும், அது நியாயத்திற்கும் சத்தியத்திற்கும் விரோதமில்லாமல் இருக்க வேண்டும். நல்ல காரியம் செய்யும் சமயத்தில் எத்தனையோ இடையூறுகள் வரும், பலர் நிந்தனை செய்ய வரலாம் அல்லது அவனுக்கு ஐஸ்வர்ய நஷ்டமும், உயிருக்கு ஆபத்தும் கூட வரலாம். ஆனால் எல்லாவற்றையும் விட நியாயமும் சத்தியமும்தான் உயர்ந்தது என்கிற பாவத்தோடு, எடுத்துக்கொண்ட காரியத்தை செய்து முடிக்க வேண்டும்.


கஷ்டங்கள் வரலாம் என்ற காரணத்திற்காக சில மனிதர்கள் எந்த நல்ல காரியத்தையும் ஆரம்பிக்ககூட மாட்டார்கள். மற்ற சிலர் எடுத்த காரியத்தில் கஷ்டங்களைப் பார்த்து நடுவில் அதை கைவிட்டு விடுவார்கள். ஆனால் உத்தமமான மனிதர்கள் எந்த கஷ்டங்கள் வந்தாலும் எடுத்துக் கொண்ட அந்த நற்பணியை முடித்துவிடுவார்கள். பகவத்பாத சங்கரர் தர்மபிரசார காரியத்தை எடுத்துக் கொண்டார். அதில் எத்தனையோ கஷ்டங்கள் வந்தன. அந்த மாதிரி சமயத்தில் மனிதனுக்கு தைரியம் மிகவும் தேவையானது. பகவத்கீதையில் கிருஷ்ண பரமாத்மா மூன்று வகைப்பட்ட தைரியத்தை பற்றி சொல்கிறார்- ஸாத்விகம், ராஜஸம், தாமஸம். காரியங்களைச் செய்யும் பொழுது ஏற்படக்கூடிய கஷ்டத்தை சகிப்பது தான் ஸாத்விகமான தைரியம். அதுதான் மிகவும் தேவையானது. இந்த தைரியத்துடன் காரியத்தை நிறைவேற்றிய மனிதன் எத்தனையோ மனிதர்களுக்கு உபகாரம் செய்தவனாவான். அவனுடைய பெயர் நீண்டகாலம் நிலைக்கும். மகாகவி பாரவி ஒரு இடத்தில் சொல்லியிருக்கிறார். ஸாஸ்வதமற்ற விலாசத்தை கவனிக்காமல் சாஸ்வதமான கீர்த்தியில் விருப்பம் உள்ளவர்களுக்கு லௌகீகமான சம்பத் என்கிறது ஒரு விஷயமே இல்லை. என்ன கஷ்டங்களிலும் எடுத்துக்கொண்ட நல்ல காரியத்தை செய்து முடித்து, சாஸ்வதமான கீர்த்தியை சம்பாதிக்க வேண்டும்.





ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)
An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகளின் அருளுரைகள் 3



மனிதன் க்ஷேமம் அடைவதற்கு தர்மத்துக்கு உயர்ந்த இடம் உண்டு. சகல தர்மங்களிலும் உத்தமமான தானம் ஒருவருக்கு ஏதோ ஒன்றை மகிழ்ச்சியுடன் கைமாறு எதுவும் எதிர்பார்க்காமல் கொடுப்பது. ஸாத்விக, ராஜஸிக, தாமஸிக என்று மூன்று வகையான தானங்களில் தகுதியுள்ள மனிதனுக்கு சரியான சமயத்தில், தகுந்த இடத்தில், கொடுப்பது ஸாத்விக தானம். இஷ்டமில்லாமலும் கைமாறு எதிர்பார்த்தும் கொடுப்பது ராஜஸிக தானம். பண்பற்று தாழ்வுபடுத்தும் முறையில் சமயம் இடம் பெறுபவன் தன்மை எல்லாவற்றையும் லக்ஷியம் செய்யாமல் கொடுப்பது தாமஸிக தானம். ஸாத்விகதானம்தான் கொடுக்கப்பட வேண்டும். மற்ற தானங்கள் நிஷித்தம் (பயனற்றது).


தானங்களில் வித்யா தானம் உண்மையில் பெரியது. குரு வித்யயை கொடுப்பதால் மிகவும் மதிப்புக்குரியவர். தானமாக கொடுத்த வஸ்துக்கள் உபயோகத்தில் கரைந்து விடுகின்றன. தானம் அளித்த வித்தை அப்படிப்பட்டதல்ல. அது மேலும் வளரும். ஆதலால் தன்னிடம் எள்ளளவில் உள்ள வித்தையை சுலபமாக மற்றவர்களுக்கு அளிக்கலாம். இதுவும் சத்காரியமாகும்.ஆதிசங்கரர் போன்ற ஞானிகள் உலகத்துக்கு ஞானத்தை தானம் அளித்து அழியாத கீர்த்தி பெற்றிருக்கிறார்கள். அதே மாதிரி பண்டைய காலத்து அரசர்கள் பக்தர்களுக்கும் ஏழைகளுக்கும் விசேஷ இனாம்களை கொடுத்து புகழ் அடைந்து இருக்கிறார்கள். தன் சக்திக்கேற்ப தானம் அளித்து எல்லோரும் கீர்த்தி பெறட்டும். பாவத்திலிருந்து நரகமும், ஏழ்மையிலிருந்து பாவமும் தானமின்மையிலிருந்து ஏழ்மையும் உண்டாகின்றன. ஆதலால் எல்லோரும் தானம் கொடுக்க வேண்டும்.

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

### ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகளின் அருளுரைகள் 4

வாழ்க்கையில் நாம் விருத்தி செய்ய வேண்டிய முக்கிய குணங்களில் கருணை ஒன்று. இன்பமும் துன்பமும் எல்லாருடைய வாழ்க்கையிலும் மாறி மாறி வருவதால்



கஷ்டப்படுபவர்களுக்கு நாம் உதவி செய்ய வேண்டியது மிகவும் அவசியம். மற்றவர்களுக்கு உதவ ஒரு ஆர்வம் நமக்குள் ஏற்படுவதற்கு நமக்குள் கருணை இருக்கவேண்டும்.


பகவானுடைய கருணை எல்லையற்றதாக இருப்பதால் அவர் கருணைக்கடல் என்று வர்ணிக்கப்படுகிறார். லோகஸம்ரக்ஷணத்துக்காக அனேக அவதாரங்களை எடுக்க இந்த கருணைதான் பகவானை தூண்டுகிறது. ஒருவன் கருணையால் மற்றொருவனுக்கு உதவும் பொழுது அதற்கு கைமாறு எதிர்பார்க்கக்கூடாது. அப்பொழுதுதான் அவன் ஸத்புருஷன் என்று அழைக்கத்தக்கவன்.

கருணையினால்தான் குரு தன் சிஷ்யனுக்கு உபதேசம் செய்கிறார் என்று ஆதிசங்கர பகவத்பாதர் கூறுகிறார். சிஷ்யன் குருவை பக்தியுடன் அணுக வேண்டும். ஏனென்றால் குரு ஒரு கருணைக்கடல். மற்றும் பிரஹ்மஞானிகளில் உத்தமமானவர் என்பது பொருள்.

ஒவ்வொருவரும் அன்றாட வாழ்க்கையில் நற்குணமான கருணையை விருத்தி செய்து நடைமுறையில் கொண்டு வர வேண்டும். மற்றவர்களுக்கு செய்யும் சிறு உதவிக்கும் அதன் புண்ணியம் உண்டு. மற்றவர்களை பற்றி

நல்லதை சொல்வதே ஒரு ஸத்காரியம். தனக்கு தீங்கு செய்ய வந்த ஒரு கபாலிகாவுக்கே ஆதிசங்கரர் கருணை காட்டினார். இது உன்னதமான கருணை.

குழந்தை பருவத்தில் இருந்தே சிறுவர்களிடம் கருணையை பதிய வைக்கவேண்டும். பள்ளியில் பயிலும் பொழுதும் தங்களுடன் படிக்கிறவர்களுக்கு எவ்வித சிறு உதவியையும் அளிக்க மாணவர்களுக்கு கற்றுத்தர வேண்டும். இரண்டு மனிதர்கள் சண்டை போடுவதை நாம் பார்த்தால் அவர்களை சமாதானப்படுத்தி சண்டையை நிறுத்த முயற்சிப்பது நம் கடமை. கருணை நிறைந்தவர்களால் தான் இம்முயற்சியில் ஈடுபட முடியும்.



நல்ல பதவியில் இருப்பவன் தகுதியுடன் தன்னைத் தேடி வந்தவர்களுக்கு நியாயமான உதவிகளை செய்ய வேண்டும். மற்றவர்களுக்கு உதவி செய்வதற்கு நம் வாழ்க்கையில் நிறைய சந்தர்ப்பங்கள் உள்ளன. அவைகளை தவறவிட்டால் வருத்தப்படவேண்டி வரலாம். அது அறிவில்லாமையும்கூட. ஆதலால் எல்லோரும் மற்றவர்களுக்கு தங்களால் முடிந்த உதவியை செய்து பகவதனுக்ரஹத்தை பெறுவார்களாக

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)
An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகளின் அருளுரைகள் 5

மானிட செயல்பாடுகளின் குறிக்கோள்கள் நான்கு வகைப்பட்டவை: கடமைகளை நிறைவேற்றுதல், திரவியம் திரட்டுதல், ஆசைகளைப் பூர்த்தி செய்தல், (முடிவில்) மோக்ஷம் அடைதல். இவைகளில் மோக்ஷம் பெறுதல் உன்னதமானது. ஆத்ம ஞானத்தால் மட்டுமே மோக்ஷம் கூடிவரக்கூடியது. இது ஸ்ருதியில் மிகத் தெளிவாக கூறப்பட்டிருக்கிறது



அதாவது மரணத்திற்கு அப்பால் உள்ள நிலை தன்னை அறிந்து கொண்ட பின்பே கிட்டும். ஆத்மஞானமான தன்னை அறிந்து கொள்வது ஒரு குருவினிடம் இருந்துதான் பெறக்கூடும். தனக்கென்று ஒரு குரு உள்ளவன்தான் உண்மையிலேயே மனிதன் என்றும் சுருதியில் கூறப்படுகிறது. குரு என்பவர் யார் என்ற கேள்வி தோன்றுகிறது. அதாவது குரு என்பவர் எல்லா தர்மங்களையும் கரைத்துக் குடித்தவரும் தன் சீடனின் நல் வாழ்வில் ஈடுபட்டவருமாவர் என்ற பதில் கிடைக்கிறது.

ஒரு குருவின் இந்த குணம் ஸ்ரீசங்கர பகவத்பாதரிடம் முழுமையாக காணப்பட்டிருந்தது. அவருக்கு எல்லா சாஸ்திரங்களில் மறைந்துள்ள தத்துவங்களும் தெரியும். அவர் முழுமனித வம்சத்தின் நன்மைக்காக பாடுபட்டார். அநேக நூற்றாண்டுகள் கழிந்த பின்பும், அவர் அருளிய உறைகள் வேதங்களுக்கு வழிகாட்டும் விளக்காக பிரகாசிக்கின்றன.

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)



உபநிஷத்துகளில் உள்ள அத்வைதத்தையே ஸ்ரீசங்கரரும் உபதேசித்தார். அவர் புது தத்துவம் எதையும் தோற்றுவிக்கவில்லை. இந்த தத்துவம் ஸ்ரீ கிருஷ்ணரால் பகவத் கீதையிலும் வேதவியாஸரால் ப்ரம்ஹஸூத்திரத்திலும் வெளிப்படுத்தப்பட்ட அத்வைத தத்வமே என்பது அறிஞர்களின் ஒருமித்த கருத்து. ஆகவே வித்வத்ஸ்வரூபியும் ப்ரேம ஸாகரமுமான ஸ்ரீ சங்கர பகவத்பாதரின் ஜன்மதினத்தை நாம் எல்லோரும் கொண்டாட வேண்டும்.

நல்வாழ்வை நாடுபவர் நிச்சயம் இம்மாதிரி ஆத்ம ஞானிகளை பூஜிக்கவேண்டும் என ஸ்ருதி கூறுகிறது. ஸ்ரீ சங்கர பகவத்பாதரின் அனுக்ரஹம் எல்லா ஆஸ்திகர்களுக்கும் கிடைக்கட்டும்! முயற்சி செய்கிறவர்களுக்கு மோக்ஷம் கிடைக்கட்டும்!

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)



An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகளின் அருளுரைகள் 6



பரமாத்மாவாகிய பகவானுடைய மஹிமை அஸாதாரணமானது. அவரை நாம் எவ்வளவு புகழ்ந்தாலும் போதாது. ஆனால் நம் சக்திக்கேற்ப அந்த பரமாத்மாவை பூஜித்து நமது வாழ்க்கையை மேன்மையாக்க வேண்டும். நம் முன்னோர்கள் பரமாத்மாவை அனேக நாமங்களால் துதித்து நற்பயன் அடைந்தார்கள். இவைகளில் ஸஹஸ்ரநாமங்கள் மிகவும் பிரசித்தி பெற்றவை. ஸஹஸ்ரநாமங்களுக்ள் லலிதா ஸஹஸ்ரநாமம் விசேஷமானது.

லலிதா ஸஹஸ்ரநாமம் வேதாந்த தத்வங்களை மொழிந்து பரமாத்மாவின் நற்குணங்களுடன் கூடிய உருவத்தை (ஸகுண ரூபத்தை)யும் துதிக்கும் முறைகளையும் மற்றும் பரதேவதை எவ்வாறு ஜனங்களுக்கு அனுக்கிரஹம் புரிகிறாள் என்பதையும் வர்ணிக்கிறது. குறிப்பாக ஸ்ரீ சங்கரர் உபதேசம் செய்த அத்வைத சித்தாந்தம் லலிதா ஸஹஸ்ரநாமத்தில் அனேக இடங்களில் கூறப்பட்டிருக்கிறது. மித்யாஜகத் அதிஷ்டானா த்வைதவர்ஜிதா, தத்வ மர்த்தஸ்வரூபிணி என்ற நாமாக்கள் அத்வைத ஸித்தாந்தங்களை வெளிப்படுத்துகின்றன. நாமபாராயணப்ரீ தா என்ற நாமா நாம் அவளுடைய அனுக்ரஹத்தை பெறுவதற்கு அவளுடைய நாமாக்களை பாடவேண்டும், என்று காண்பிக்கிறது. ஸத்யப்ரஸாதினி என்ற நாமா நிஷ்டையுடன் அவளைப் பூஜித்தால் நாம் வேண்டுவதை வேகமாக பெறமுடியும் என்று சொல்கிறது. அதே மாதிரி நிர்வாண ஸுகதாயினி என்ற நாமாவுக்கு மோக்ஷம் அடைவதற்காக அவளுடைய நாமாக்களை ஜபிக்கிறவர்களின் விருப்பமும் நிறைவேறக்கூடியது என்பது பொருள். கல்பவிருக்ஷம் போன்று அவர்களுடைய ஆசைகளை பூர்த்தி செய்யும் லலிதா ஸஹஸ்ரநாமத்தை பாராயணம் செய்து எல்லா பக்தர்களும் தங்களுக்கு வேண்டிய நன்மை அடைந்து கொள்வார்களாக


Voice of Jagadguru
advaitam paramanandam
an e-magazine on advaita


ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)
An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகளின் அருளுரைகள் 7



ஆதிசங்கர பகவத் பாதர் அத்வைத ஸித்தாந்தத்தை தெளிவாகத் தெரியப்படுத்துவதற்காக எழுதிய நூல்களில் விவேக சூடாமணி மிகச் சிறந்தது. இந்நூலில் அந்த ஸித்தாந்தத்தின் எல்லா நிலைகளையும் சுருக்கமாகவும், தெளிவாகவும் அவர் சொல்லியிருக்கிறார். முக்கியமாக வேதாந்த தத்வத்தை தெரிந்து கொள்வதற்கு வேண்டிய யோக்யதையையும் யோக்கியமான சிஷ்யன் தன் குருவினிடம் தத்வத்தை கேட்கும் முறையையும், அப்பேர்ப்பட்ட சிஷ்யனுக்கு சரியான முறையில் தத்வத்தை தெரியப்படுத்தும் நீதியையும் இந்த கிரந்தத்தில் கூறியிருக்கிறார்.

எங்கள் பரம குருவான ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகர பாரதி மஹாஸ்வாமிகள், இந்த கிரந்தத்தின் மீது அழகான உரை எழுதி இருக்கிறார். அதன் மூலமாக இந்த கிரந்தத்தை சுலபமாக புரிந்து கொள்ள முடியும். இந்த கிரந்தத்தின் பிரயோஜனத்தை ஸ்ரீ சங்கர பகவத் பாதர் அதன் கடைசி ஸ்லோகத்தில் சொல்லி இருக்கிறார். மோக்ஷத்துக்கு வேண்டிய மார்க்கம் இந்த கிரந்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது என்று அர்த்தம். அந்த மார்க்கம் முக்கியமாக என்னவென்று பகவத் பாதர் சொல்லியிருக்கிறார்.மோக்ஷத்தில் விருப்பம் இருக்கிறவன் லௌகிகமான விஷயங்களை விஷத்தைப் போல் விட்டுவிட வேண்டும். திருப்தி, தயை, பொறுமை, நேர்மை, சாந்தி, கட்டுப்பாடு ஆகிய இவைகளை அம்ருதம் பருகுவது போல் கடைபிடிக்க வேண்டும். இந்த யோக்யதையை சம்பாதித்தவன் தான் மோக்ஷ மார்க்கத்தில் ஸஞ்சரிக்க முடியும் என்பது பொருள். இப்பேர்பட்ட பல சிறந்த விஷயங்களை கொண்ட இந்த விவேக சூடாமணியை, எல்லோரும் படித்து சிரேயவான்களாகட்டும்.

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)
An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகளின் அருளுரைகள் 8



மனிதன் எப்பொழுதும் உயர்ந்த எண்ணங்களைத்தான் மனதில் கொள்ள வேண்டும். தீங்கு எண்ணத்தை ஒருபொழுதும் அவன் வைத்திருக்கக்கூடாது. மற்றவர்களுக்கு துன்பம் கொடுப்பவன் கடைசியில் தனக்கே ஆபத்தை வலவழைத்துக் கொள்வான். ராமாயணத்தில் ராவணனின் செயல்களில் இது தெளிவாக வெளிப்படுகிறது. அவன் ஸ்ரீராமரின் தர்மபத்னி சீதையை அபகரித்து இலங்கையில் சிறை வைத்தான். ராமதூதர் ஹனுமான் இலங்கைக்குச் சென்று ராவணனிடம் சீதையை ராமரிடம் திருப்பி சேர்ப்பதுதான் அவனுக்கு நன்மை என்று சொன்னார்.

அதைக் கேட்காமல் ராவணன் தனக்கு புத்திமதி சொன்ன ஹனுமானுக்கே தீங்கு நினைத்து நெருப்பு வைத்தான். அந்த தீ ஹனுமானுக்கு ஒரு கெடுதலும் செய்யாமல் இலங்கையை எரித்து.


ஆதலால் மற்றவர்களுக்கு கெடுதல் இழைக்கக்கூடாது. தீங்கு இழைத்தவர்களிடம் கூட சங்கர பகவத்பாதர் பொறுமை காட்டினார். இது மஹான்களின் அடையாளம். பகவான் கீதையில் மற்றவர்களின் மனதில் பயம் உண்டாவதற்கு இடம் கொடுக்காதவன் எவனோ, அவன் எனக்குப் பிரியமானவன். இத்தகைய மனிதன் எவனாக இருக்கக்கூடும்? அவன் மற்றவர்களுக்கு தீங்கு நேருவதை விரும்பாதவனாகவே இருப்பான். இப்படிப்பட்ட மனிதன் மட்டுமே பகவானின் உண்மை பக்தனாக முடியும்.

மகாபாரதத்திலும் துரியோதனன் யுதிஷ்டிரனுக்கு கெடுதல் செய்யும் முயற்சியில் தனக்கே அழிவை வரவழைத்துக் கொள்வதை நாம் பார்க்கிறோம். ஆதலால், ஒவ்வொருவரும் இதை நன்றாக புரிந்துகொண்டு ஒருபொழுதும் மற்றவர்களுக்கு தீங்கு இழைக்க நினைக்காமல் உபகாரம் செய்யும் குணத்தை வளர்க்க வேண்டும்.

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகளின் அருளுரைகள் 9




சிவபெருமானிடம் கேட்டுப் பெற்ற ஒரு வரத்தை வைத்துக்கொண்டு, கர்வம் பிடித்த பஸ்மாஸுரன் உலகத்துக்கு பெரும் நாசம் ஏற்படுத்திக் கொண்டிருந்தான்.. அவனை ஒழிக்க, மஹாவிஷ்ணு பெருமான் மோஹினி என்ற ஒரு அப்ஸரஸின் உருவத்தை எடுத்தார்.. தர்மசாஸ்தா பரமசிவ பெருமானுக்கும் மோஹினி அவதாரத்துக்கும் பிறந்த மகன்தான்.! சாஸ்தா., ஐயப்பன்., என்றும் அவர் அழைக்கப்படுகிறார்.. ஐயப்பன் வஸிக்கும் இடமான சபரிமலை கேரளத்தில் ஒரு யாத்திரைஸ்தலம்.. ஐயப்பன் பஸ்மாஸுரனை அழித்து உலகத்தைக் காப்பாற்றினார். மஹாஸங்ரமண தினத்தன்று, ஐயப்பனின் அவதாரம் நிகழ்ந்ததாக கூறப்படுகிறது.. ஆதலால் அந்த தினத்தில் ஐயப்பனை தரிசிப்பது மிக்க மங்களகரமானது.. லக்ஷக்கணக்கான யாத்ரீகர்கள் இதற்காக சபரிமலைக்குச் செல்கிறார்கள்..

சபரிமலைக்கு செல்ல தீர்மானிக்கும் முன் சொந்த விஷயத்தில் சில நிபந்தனைகளை அனுசரிப்பது யாத்திரீகர்களால் வெளிப்படையாக தெரிவிக்கப்படுவது வழக்கமாகிவிட்டது.. இந்த கட்டுப்பாடுகளை கடைப்பிடித்து யாத்ரையில் செல்பவனுக்கு சிறப்பான பலன்கள் கிடைக்கும்..

இந்தியாவில் நிறைய இடங்களில் ஐயப்பன் கோவில்கள் கட்டப்பட்டு இருக்கின்றன.. அவைகளில் பல கோவில்களில் ஐயப்பன் திருவிழாக்கள் மிக விமரிசையாக நடத்தப்படுகின்றன.. இந்த உத்ஸவங்கள் பகவத் பக்தியையும் தெய்வ நம்பிக்கையையும் பரப்ப நிச்சயம் அவசியமானவை.. ஸ்ரீ ஐயப்பனைத் துதித்து எல்லோரும் நன்மைகள் பெறுவார்களாக.!

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்,
ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்
அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்